செய்தி வெளியீடு எண்:990 நாள்:9.10.2010.

# விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் எக்காரணம் கொண்டும் ரத்து செய்யப்பட மாட்டாது!

# இலவச மின்சார மோட்டார்களில் மீட்டர் பொருத்தப்பட மாட்டாது!

# தமிழக அரசு விளக்கம்!

தமிழக விவசாயிகளின் நலன் கருதி பல்வேறு சலுகைகளைத் தொடர்ந்து கழக அரசு வழங்கி வருகிறது. இந்த அரசுதான் இந்தியாவிலேயே முதல்முறையாக 1990ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கி வருகிறது.

தற்போது 14 இலட்சத்து 67 ஆயிரம் மின்சார மோட்டார்களை சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதென்றும்; இந்த ஆண்டில் 2 இலட்சம் மின்சார மோட்டார்களை இலவசமாக வழங்குவதென்றும் முடிவுசெய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இலவசமாக வழங்கப்படவுள்ள மின்சார மோட்டார்களில் மீட்டர் பொருத்தப்படப் போவதாகவும், இதன் மூலம் இலவச மின்சாரத்தை ரத்து செய்யப்போவதாகவும், ஒருசில எதிர்க்கட்சியினர் வேண்டுமென்றே திட்டமிட்டு விவசாயிகளைத் திசைதிருப்புவதற்காகவும், இலவச மின்சார மோட்டார் திட்டத்தையே கொச்சைப்படுத்துவதற்காகவும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதை தமிழக அரசு வன்மையாகக் கண்டிக்கிறது.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச மின்சாரத்தை எக்காரணம் கொண்டும் இந்த அரசு ரத்து செய்யாது என்று பலமுறை அரசு சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அந்த விளக்கத்தையே மீண்டும் இதன்மூலம் அரசு உறுதி செய்கிறது.

மேலும், தற்போது வழங்கப்படவுள்ள இலவச மின்சார மோட்டார்களில் மீட்டர் பொருத்தப்படமாட்டாது.

எனவே, தமிழக விவசாயிகள் பொய்ப் பிரச்சாரத்தை நம்பவேண்டாம் என்று அரசு கேட்டுக்கொள்கிறது.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.